# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Issue 35 | August 2023 | Issue 8



21.9.2023 அன்று மதுரை வந்த இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை & சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களை, TNROA மாநில மையத்தின் சார்பில் சந்தித்து கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் சிறப்பு பணியிடங்கள் வழங்குவது குறித்து பேசப்பட்டது



TNROA மாநில மையத்தின் சார்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு KKSSR இராமச்சந்திரன் அவர்களை சந்தித்தபோது...

தனிப்பிரதி விலை ரூ.10/-
*Per Copy Rs.10/-*

ஆண்டு சந்தா ரூ.120/-
*Annual Subscription Rs.120/-*



நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஆக்கிரமிப்பை அகற்றிய வட்டாட்சியரின் இடைக்கால பணிநீக்கத்தை இரத்து செய்ய வலியுறுத்தி 29.8.2023 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அறவழியில் 'காத்திருப்பு போராட்டம்' நடத்திய தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஊழியர்களை காவல்துறையை ஏவி அராஜகமாக கைது செய்து மண்டபத்தில் வைத்திருந்த தருணங்கள்



புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலவிவரும் நீண்ட நாள் பிரச்சனைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து மாநில மையத்தின் சார்பில் முறையிடப்பட்டது. மேலும் மாவட்ட நிர்வாகிகள் உடனும் கலந்துரையாடலில் மாநிலச் செயலாளர் தோழர் ஆ.தமிழரசன் பங்கேற்றார்



இணை ஆணையர் (வருவாய் நிர்வாகம்) ஆக பணியேற்றுள்ள திரு.பிரகாஷ் கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்களை TNROA மாநில மையத்தின் சார்பாக சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது

### *வீறு கொண்டெழுந்த வருவாய்த்துறை அலுவலர்கள்*

# வரலாறு படைத்த கள்ளக்குறிச்சி "காத்திருப்புப் போராட்டம்"

**க**டமையைச் செய்யும் அரசு ஊழியரை அதிகார வர்க்கம் துச்சமென நினைத்து பலிகடா ஆக்கினால், உழைக்கும் வர்க்கம் என்ன செய்யும் என்பதை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் மற்றொரு முறை பிரகடனம் செய்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் பகுதியில் ஆதிதிராவிடர் நலம் அரசு நிலத்தில் பொது பயன்பாட்டிற்கான இடத்தில் தனி நபர்கள் மேற்கொண்ட ஆக்கிரமிப்புகளை, நீதிமன்றத் தீர்ப்பினைத் தொடர்ந்து அகற்றம் செய்த வட்டாட்சியர் திரு.மனோஜ் முனியன் என்பவரைக் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஷர்வன் குமார், இ.ஆ.ப., அவர்கள், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வசந்தம் கார்த்திகேயன் அவர்களின் தூண்டுதலின் பேரில் இடைக்கால பணி நீக்கம் செய்தது தமிழகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழக அரசின் ஆதி திராவிடர் நலத்துறை கூடுதல் அரசு தலைமைச் செயலாளர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டஆட்சித் தலைவர் ஆகியோர், நீதிமன்றம் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்திரவிட்டும் அகற்றாததால், தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கில் வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் அக்கிரமிப்புகளை அகற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட உத்திரவுகளை அமல்படுத்திய வட்டாட்சியருக்கு நேர்ந்த நிலை, ஒட்டுமொத்த அரசு ஊழியர்களுக்கும் அரசு நிர்வாகத்தின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்தது.

அரசியல் தலையீட்டின் காரணமாக வட்டாட்சியர் இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்டதை இரத்து செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியும் சுமூகத் தீர்வு ஏற்படாததால், கடந்த 14.8.2023 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தர்ணா போராட்டம் நடைபெற்றது. எழுச்சியாக நடைபெற்ற இப்போராட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கம், தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தோழமைச் சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும் திரளாகக் கலந்து கொண்டு தங்களது ஆதரவினைத் தெரிவித்தனர். இப்போராட்டத்திற்கு முன்பாக தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில மையத்தின் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் அரை மணி நேரம் பேசியும் மாவட்ட ஆட்சியரின் நிலைப்பாட்டில் சிறிதளவுகூட மாற்றம் ஏற்படவில்லை.

மாவட்ட நிர்வாகத்தின் அணுகுமுறையில் சுமூக நிலை இல்லாததைக் கருத்தில் கொண்டும், பாதிக்கப்பட்ட அலுவலரை மீண்டும் பணியமர்த்திட வலியுறுத்தியும் மாநில அளவில் இரண்டு கட்டப் போராட்டங்களை அறிவித்தது மாநில மையம். இதன்படி

முதற்கட்டமாக 25.8.2023 அன்று தமிழகத்தின் அனைத்து மாவட்ட மற்றும் வட்டத் தலைநகரங்களில் எழுச்சியான “கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது. தமிழ்நாட்டின் அனைத்து வருவாய்த்துறை அலுவலகங்கள் முன்பாக கண்டனப் பதாகைகள் வைக்கப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த வட்டாட்சியர் முதல் அலுவலக உதவியாளர் வரை அனைவரும் கலந்து கொண்டு தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

திரு.மனோஜ் முனியனின் இடைக்கால பணி நீக்கத்தை இரத்து செய்திட வலியுறுத்தி வருவாய் நிருவாக ஆணையர், வருவாய்த்துறை அரசுச் செயலாளர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ஆகியோரிடம் தொடர்ந்து வலியுறுத்தியும், யாருடைய பேச்சையும் கேட்காமல் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினரின் பேச்சை மட்டுமே கேட்பேன் என்றுள்ள கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் விசித்திரமானது, நியாயமற்றது. பழிவாங்கும் நடவடிக்கையை இரத்து செய்திட 3 வாரங்கள் தொடர்ந்து போராடிய நிலையில் மாநிலம் தழுவிய இரண்டாம் கட்டப் போராட்டமான, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 5 மாவட்டங்களைச் சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களின் காத்திருப்புப் போராட்டத்தை நடத்திட வருவாய்த்துறை அலுவலர்கள் தள்ளப்பட்டனர்.

வருவாய்த்துறை அலுவலர்களின் போராட்டங்களுக்கு முன்பாக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சங்க நிர்வாகிகளை அழைத்து பேசி சுமூக சூழ்நிலை ஏற்படுத்துவது பொதுவான வழக்கம். ஆனால், தொடர் போராட்டங்கள் நடைபெற்ற நிலையிலும் கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகம் இவ்வாறு அழைக்காததால், காத்திருப்புப் போராட்டத்திற்கு முன்பாக மாவட்ட ஆட்சியரை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிருவாகிகள் நேரில் சந்தித்து பேசினர். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்திற்கு பேச்சுவார்த்தைகளில் எப்போதும் முழு நம்பிக்கை உள்ளதெனவும், போராடும் ஊழியர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இடைக்கால பணி நீக்கத்தை விரைவில் இரத்து செய்திட மீண்டும் வலியுறுத்தப்பட்டது. ஊழியர்களின் கோரிக்கையை சற்றும் ஏற்காத மாவட்ட ஆட்சியர் தொடர்ந்து ஆணவத்தோடு செயல்பட்டு வந்தார்.

எனவே, திட்டமிட்டபடி 29.8.2023 அன்று பிற்பகல் 3 மணிக்கு காத்திருப்புப் போராட்டம் தொடங்கியது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பாக திரண்டிருந்த கள்ளக்குறிச்சி மாவட்டத் தோழர்களோடு விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்களும் திரளாக வந்து சேர்ந்தனர். ஜனநாயக ரீதியாக, அறவழியில் போராட்டம் நடத்திட அனுமதி அளிக்காமல் கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகம் காவல்துறையை ஏவி போராட்டத்தை நசுக்க முயன்றது. திரண்டிருந்த ஊழியர்களை உள்ளே செல்ல அனுமதிக்காமல், வளாகத்திற்கு உள்ளிருந்து ஊழியர்களை வெளியே செல்ல அனுமதிக்காமலும் போலிசாரின் கைப்பாவை நடவடிக்கைகள் தொடர்ந்தது.

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 300க்கும் மேற்பட்ட வருவாய்த் துறைஅலுவலர்கள், தங்களது நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி அறவழியில் ‘காத்திருப்புப் போராட்டம்” நடைபெற்று வந்த நிலையில், இரவு 8 மணியளவில் அனைவரையும் கைது செய்வதாக கள்ளக்குறிச்சி காவல்துறை அறிவித்தது. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள்,

ஊழியர்கள், பெண் தோழர்கள் என 300க்கும் மேற்பட்டோரைக் கைது செய்து திருமண மண்டபத்தில் அடைத்தனர். மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன், பொதுச் செயலாளர் சு.சங்கரலிங்கம், மாநிலப் பொருளாளர் வெ.சோமசுந்தரம், மாநில நிர்வாகிகள் ஏ.மணிகண்டன், வெ.அர்த்தநாரி, ஆ.தமிழரசன், கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் காதர்அலி, மாவட்டச் செயலாளர் அனந்தகிருஷ்ணன் மற்றும் விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, சேலம்ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகளும், ஊழியர்களும் கைது செய்யப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் தமிழகம் முழுவதும் பரவியது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் மகாலிங்கம் உள்ளிட்ட தோழமைச் சங்க நிர்வாகிகளும் சிறைப்பிடிக்கப்பட்டனர். கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் தோழர்கள் தாமாக முன்வந்து கைதானது போராட்டத்தின் வெற்றிக்கு திருப்பமாக அமைந்தது.

காவல்துறை மூலமாக ஜனநாயக வழியில் போராடியவர்களின் குரல் வளையை நெறிப்பதைஅனுமதிக்க முடியாது என ஒட்டுமொத்த அலுவலர்களும் வெகுண்டெழுந்தனர். அனைத்து மாவட்ட மையங்களும் கண்டனம் தெரிவித்ததோடு, மாநிலம் தழுவிய இயக்கத்திற்கு அறைகூவல் விடுத்திட வலியுறுத்தினர். சில மாவட்டத் தோழர்கள் கள்ளக்குறிச்சி நோக்கி படையெடுக்க அனுமதி கோரினர்.

கைது செய்து அடைக்கப்பட்ட மண்டபத்திலேயே இரவு உணவிற்கு பின்பாக மாநில நிருவாகிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் வரலாறு காணாத அதிகார அத்துமீறல் செய்து வரும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு.ஷ்ரவன்குமார் இ.ஆ.ப., அவர்களின் ஊழியர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், போராடும் ஊழியர்களையும், பெண் ஊழியர்களையும் அராஜகமாக கைது செய்தமைக்கும் கண்டனங்கள் எழுப்பப்பட்டன.

தமிழகத்தின் 14000 வருவாய்த்துறை ஊழியர்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு, 30.8.2023 தமிழகத்தின் அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களும் தங்கள் பணிகளைப் புறக்கணித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு முன்பாக காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதென ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. நள்ளிரவில் அறிவிக்கப்பட்ட முடிவுகளைக் களத்தில் அமல்படுத்த காத்திருந்த வருவாய்த்துறை அலுவலக சங்க சேனைகள் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக செயல்பட்டன.

மறுதினம், 30.8.2023 தமிழகத்தின் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களும், வட்டாட்சியர் அலுவலகங்களும் போர்க்களம் போல் காட்சியளித்தது. கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் அதிகார மமதைக்கு எதிராகவும், அரசு நிர்வாகத்தில் அரசியல்வாதிகளின் தலையீடுகளுக்கு எதிராகவும், பாதிக்கப்பட்ட ஊழியரின் இடைக்கால பணி நீக்கத்தை இரத்து செய்திட வலியுறுத்தியும் தமிழகம் முழுவதும் ஆர்ப்பரித்து கோஷங்கள் ஒலித்தது. தமிழக அரசின் சிறப்பு திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டப் பணிகளைப் போதிய கால அவகாசம், நிதி ஒதுக்கீடு மற்றும் கூடுதல் பணியிடங்களின்றி இரவு பகலாக மேற்கொண்டு வந்த வருவாய்த்துறை அலுவலர்கள் அப்பணிகளைப் புறக்கணித்து அலுவலக வாயிலில் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டது ஊடகங்களில் வைரலானது. வட்டப் பொறுப்பு வட்டாட்சியர்கள், அலுவலக மேலாளர்கள்

உள்ளிட்ட அனைத்து நிலை அலுவலர்களும் அலுவலக வாயிலில் கோஷமிட்டு அமர்ந்திருந்தனர்.

தமிழகத்தின் சமூக ஊடகங்களில் தொடர்ந்து செய்தி வந்து கொண்டிருந்த நிலையில் போராட்ட வீரியத்தின் காரணமாக சங்க நிர்வாகிகள் சென்னைக்கு அழைக்கப்பட்டனர். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்களின் வீரம் செறிந்த போராட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலையீட்டின் காரணமாக வட்டாட்சியரின் இடைக்கால பணி நீக்க ஆணைகளை இரத்து செய்திட உறுதியளிக்கப்பட்டது. உடனடியாக பணி நியமனம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அனைத்து போராட்டங்களும் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டன.

வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் சென்னையில் முகாமிட்டு இப்பணிகளைக் கண்காணித்தனர். இதன் பலனாக மறுதினமே திரு.மனோஜ் முனியனின் இடைக்காலப் பணிநீக்கம் இரத்து செய்யப்பட்டு மீண்டும் வட்டாட்சியராக பணியில் சேர்ந்தார். இவர் தனது உயிர் உள்ளவரை சங்கத்தை மறக்க மாட்டேன் என உருக்கத்தோடு நன்றி தெரிவித்தார்.

ஒன்றுபட்ட ஊழியர் இயக்கங்களுக்கு முன்பாக அதிகார மமதை கொண்ட ஆட்சியாளர்களின் ஆணவங்கள் தகர்ந்தது. தமிழகத்தில் இயல்பு நிலைக்கு வித்திட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கபட்டதோடு, அரசு ஊழியர்களைத் தவறாகக் கையாண்டு அரசிற்கு பெரும் களங்கத்தை ஏற்படுத்திய மாவட்ட ஆட்சியர் திரு.ஷர்வன் குமார், இ.ஆ.ப., அவர்கள் மீது விரிவான விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பணியில் சேர்ந்த நாள் முதல் ஊழியர் விரோத நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் மாவட்ட ஆட்சியரின் ஆணவத்திற்கு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் தக்க பாடம் புகட்டினர். இவர் மட்டுமில்லாது சக ஊழியர்களை அடிமைகளாக நடத்த நினைக்கும் அதிகார வர்க்கத்திற்கும், அரசு நிர்வாகத்தில் அத்துமீறி தலையிடும் அரசியல்வாதிகளுக்கும் தக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நியாயமான உரிமைகளுக்காகப் போராடிய மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் மீது நயவஞ்சகத்தோடு பொய்வழக்கு புனைந்துள்ளதை தீரத்தோடு எதிர்கொள்வோம். ஒன்றுபட்ட இயக்கத்தின் முன்பாக அடக்குமுறைகள் சிதறுண்டு போகும்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம், தனது வைர விழா (60ஆம்) ஆண்டில் ஊழியர் நலன் காக்கும் அமைப்பு என்பதையும், ஆணவம் கொண்ட அதிகாரிகளுக்கு எதிராக தொடர்ந்து குரல் எழுப்பும் இயக்கம் என்பதையும் மற்றொரு முறை பிரகடனம் செய்துள்ளது.

இப்போராட்டத்திற்கு தோளோடு தோள் நின்று ஆதரவளித்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து தோழமைச் சங்கங்களுக்கும் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழமையுடன்,
எம்.பி.முருகையன்,
மாநிலத் தலைவர், TNROA.



29.8.2023 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அறவழியில் "காத்திருப்பு போராட்டம்" நடத்திய TNROA சங்க மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள்



29.8.2023 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அறவழியில் "காத்திருப்பு போராட்டம்" நடத்திய TNROA சங்க மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஊழியர்களை காவல் துறையினர் கைது செய்த தருணங்கள்



நியாயமான கோரிக்கைகளுக்கான போராடிய ஊழியர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த திருமண மண்டபம் முன்பு குவிக்கப்பட்டிருந்த காவல்துறை



போராடிய ஊழியர்களுடன் திருமண மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பெண் ஊழியர்கள்

# 564 அலுவலக உதவியாளர் காலியிடம் நிரப்புதல் - TNROA தொடர்ச்சியான போராட்டங்கள், முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி - இரண்டு முதலமைச்சர்களின் ஒப்புதலோடு கோரிக்கை நிறைவேற்றம்

வருவாய்த் துறையில் உள்ள 564 அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் வருவாய் நிர்வாக ஆணையரால் 29.9.2023 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் கீழ்நிலைப் பணியிடங்கள் வெளிமுகமை மூலமாக நிரப்பப்படும் என கொள்கை முடிவு எடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து வருவாய்த் துறையில் அலுவலக உதவியாளர், இரவு காவலர் பணியிடங்களை outsourcing முறையில் நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் துறையின் நுட்பமான பணிகளை கருத்தில் கொண்டு நிரந்தர அடிப்படையில் இப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என செயற்குழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரசிடம் வலியுறுத்தப்பட்டது.

2021 பிப்ரவரி மாதம் நடைபெற்ற 10 நாட்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் இக்கோரிக்கை முதன்மைப்படுத்தப்பட்டு அரசின் கொள்கை முடிவுவில் மாறுதல் ஏற்படுத்தப்பட்டு, "நிரந்தர அடிப்படையில்" நிரப்பிட அரசு கடிதம் பெறப்பட்டது.

அதன் பின்பாகவும் பல்வேறு தடைகள் ஏற்பட்டு நவம்பர், 2022 சென்னை மத்திய செயற்குழு கூட்டத்திற்கு முன்பாக "தடையில்லை" என மீண்டும் அரசு கடிதம் அளித்தது.

சங்கத்தின் தொடர்ச்சியான அழுத்தங்களால் அரசு இசைவளித்த நிலையிலும், இதனை அமல்படுத்திட உயர் அலுவலர்கள் தொடர்ந்து தயக்கம் காட்டிய நிலையில், 10 தினங்களுக்கு முன்பாக கூட இது தொடர்பாக கடும் முயற்சிகளுக்கு பின்பாகவே தற்போது கடிதம் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போதைய அரசிடம் சுமார் 2 ஆண்டு காலம் தொடர்ச்சியாக போராடிய பின்பும், கடந்த 10.5.2023 சென்னை காத்திருப்பு போராட்டத்தின் விளைவாக மாண்புமிகு முதலமைச்சரின் இசையோடு தற்போது ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு மேலான சுமார் 1400 அலுவலக உதவியாளர் காலிப் பணியிடங்களை நிரப்பிட விரைவில் ஆணைகள் வெளியிடப்படும்!

தொடர்ந்து முயற்சிப்போம்... வெற்றி பெறுவோம்... இறுதி வெற்றி நமதே

மாநில மையம்,
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் (TNROA)

# வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணைரகம்

**அனுப்புநர்**

திரு எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப.,
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை -5.

**பெறுநர்**

மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்டம்.

**கடித எண். பணி 4 (5)/7225/2017, 27-09-2023**

அய்யா/அம்மையீர்,

பொருள்: **பணியமைப்பு** - வருவாய்த் துறையில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மூன்று ஆண்டுகளுக்கு கீழ் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட அறிவுறுத்தல் - தொடர்பாக

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 11.03.2015.
2. இவ்வாணையரகக் கடித எண். பணி 4(5)/7225/2017 : 31.10.2020.
3. அரசுக் கடித எண். 30388/ பணி 8(2)/2020 - 4. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்: 19.02.2021.
4. இவ்வாணையரகக் கடித எண். பணி 4(5)/7225/2017, நாள் : 24.05.2021.
5. இவ்வாணையரகக் எண். பணி 4(5)/7225/2017, நாள் : 21.06.2021.
6. அரசுக் கடித எண். 30388/ பணி 8(2)/2020 - 6, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்: 29.07.2021.
7. இவ்வாணையரகக் கடித எண். பணி 4(5)/7225/2017, பீ: 04.11.2022
8. அரசுக் கடித எண். 12551/ பணி 8(1)/2022-1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்:25.11.2022

9. இவ்வாணையரகக் கடித எண்.
4(5)/7225/2017, 02.12.2022

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதங்களின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2) பார்வை 7-இல் காணும் இவ்வாணைய கடிதத்தின் வாயிலாக அனைத்து மாவட்ட வருவாய் அலகிலும், அலுவலக உதவியாளர் பதவியில் 3 ஆண்டுகளுக்கு கீழ் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசின் தெளிவுரை கோரப்பட்டதில், பார்வை 8-இல் காணும் அரசு கடிதத்தில் வருவாய்த்துறையில் அனைத்து மாவட்டங்களிலும் மூன்று வருடங்களுக்கு கீழ் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களே, விதிகளுக்கு உட்பட்டு நிரப்பிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) இந்தேர்வு தொடர்பாக பார்வை 9-இல் காணும் இவ்வாணையரக கடிதத்தில் அனைத்து மாவட்ட வருவாய் அலகுகளிலும் அலுவலக உதவியாளர் பதவிக்கு 01.01.2020 முதல் 31.12.2022 வரை 3 ஆண்டுகளுக்கு கீழ் உள்ள காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை குறித்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடம் அறிக்கை கோரப்பட்டு வரப்பெற்ற அறிக்கைகள் தொகுக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு அனைத்து மாவட்ட வருவாய் அலகிலும் மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட 564 காலிப் பணியிடங்கள் உள்ளது கண்டறியப்பட்டது.

**பதவி: அலுவலக உதவியாளர்**

| **வ.எ** | **மாவட்டங்கள்** | **3 ஆண்டுகளுக்குட்பட்ட காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை (31.12.2022 வரை)** |
|---|---|---|
| 1 | அரியலூர் | 12 |
| 2 | செங்கல்பட்டு | 23 |
| 3 | சென்னை | 5 |
| 4 | கோயம்பத்தூர் | 15 |
| 5. | கடலூர் | 16 |
| 6 | தருமபுரி | 10 |
| 7 | திண்டுக்கல் | 23 |
| 8 | ஈரோடு | 24 |
| 9 | கள்ளக்குறிச்சி | 22 |
| 10 | காஞ்சிபுரம் | 2 |
| 11 | கன்னியாகுமரி | 23 |
| 12 | கரூர் | 18 |

| | | |
|---|---|---|
| 13 | கிருஷ்ணகிரி | 15 |
| 14 | மயிலாடுதுறை | 22 |
| 15 | நாகப்பட்டினம் | 14 |
| 16 | நாமக்கல் | 13 |
| 17 | நீலகிரி | 3 |
| 18 | பெரம்பலூர் | 7 |
| 19 | புதுக்கோட்டை | 13 |
| 20 | ராமநாதபுரம் | 16 |
| 21 | ராணிப்பேட்டை | 8 |
| 22 | சேலம் | 14 |
| 23 | சிவகங்கை | 42 |
| 24 | தென்காசி | 13 |
| 25 | தஞ்சாவூர் | 35 |
| 26 | தேனி | 30 |
| 27 | திருச்சிராப்பள்ளி | 18 |
| 28 | திருப்பத்தூர் | 3 |
| 29 | திருவாரூர் | 23 |
| 30 | தூத்துக்குடி | 3 |
| 31 | திருநெல்வேலி | 14 |
| 32 | திருப்பூர் | 14 |
| 33 | திருவள்ளூர் | 13 |
| 34 | திருவண்ணாமலை | 12 |
| 35 | வேலூர் | 14 |
| 36 | விழுப்புரம் | 12 |
| | **மொத்தம்** | **564** |

4) எனவே தற்போது 3 ஆண்டுகளுக்கு கீழ் காலியாக உள்ள 564 அலுவலக உதவியாளர் பணியிடங்களை தமிழ்நாடு அடிப்படைப்பணி விதிகளில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படியும், தற்போது நடைமுறையில் உள்ள அறிவுறுத்தல்கள்/ அரசாணைகள்/ வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றை முறையாக பின்பற்றி மேற்கண்ட காலிப் பணியிடங்களை நிரப்பிட இக்கடிதத்தின் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,
எஸ்.கே.பிரபாகர் இ.ஆ.ப.,
ADDITIONAL CHIEF SECRETARY/ COMMISSIONER OF REVENUE ADMINISTRATION

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

*(அரசாணை எண்.2141, பொதுத் (பணி-அ) துறை, நாள் : 6.10.66ன்படி அங்கீகரிக்கப்பட்டது)*

## THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION

## *மாநில மையம்*

*க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

நாள்: 09.09.2023

## மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள் - திருச்சி

**த**மிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 09.09.2023 அன்று திருச்சிராப்பள்ளி மாநகரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் முன்னிலை வகித்தார். மாநிலத் துணைத்தலைவர் திரு.இரா.மங்களபாண்டியன் அனுமதி பெற்று இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இதர மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முதல் நிகழ்வாக திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைவர் திரு.பிரகாஷ் அனைவரையும் வரவேற்றார்.

மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தனது தலைமை உரையில் கடந்த கால நடவடிக்கைகளில் மாநில மையத்தின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பதாகவும், குறிப்பாக கடந்த 25.08.2023-ல் கள்ளக்குறிச்சி மாவட்டம், ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் திரு.மனோஜ்முனியன் என்பவரை விதிகளுக்கு புறம்பாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்திட வலியுறுத்தி மாநிலம் முழுவதும் நடைபெற்ற தர்ணா போராட்டம், 1000 இடங்களில் பதாகை வைக்கப்பட்டது, 29.08.2023 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கடலூர், சேலம், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்ட காத்திருப்புப் போராட்டம் மற்றும் இதனைத் தொடர்ந்து 30.08.2023 அன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த 14000 வருவாய்த்துறை அலுவலர்களும் கலந்து கொண்ட எழுச்சியான பணிப் புறக்கணிப்பு மற்றும் காத்திருப்பு போராட்டம் ஆகியவை தமிழகம் முழுமைக்கும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதன் காரணமாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் திரு.மனோஜ்முனியன் என்பவரது தற்காலிக பணி நீக்கம் விலக்கிக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் இரவே மீளப்பணியிடம் வழங்கப்பட்டது என்பது இதுவரை நடந்திராத மிக சிறப்பான வரலாற்று நிகழ்வு என்றும், இதற்கு காரணம் நமது அமைப்பின் பலம் மற்றும் உறுப்பினர்களின் ஒற்றுமை ஆகியவைதான் என்று குறிப்பிட்டார். மேலும், கடந்த 05.08.2023 அன்று சிவகங்கையில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக மாநில மையத்தின் சார்பில் அளிக்கப்பட்ட முறையீடுகள் குறித்தும், உயர் அலுவலர்களின் சந்திப்பு குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாநிலத் தலைவர் தனது உரையில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட தொடர் இயக்க நடவடிக்கைகளின் விளைவாக 2019-ம் ஆண்டு வரை துணை ஆட்சியர் பட்டியல் திருத்தம் செய்து வெளியிடப்பட்டுள்ளது என்றும், இதன் தொடர்ச்சியாக இதர மூன்று ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பட்டியல் தயார் செய்யப்பட்டு பதவி உயர்வு வழங்கிட விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில், சில தனி நபர்கள் மாண்பமை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இடைக்கால தடையாணை பெற்றுவிட்ட காரணத்தினால் துணை ஆட்சியர் பதவி உயர்வு வழங்கிடுவது தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மேற்கண்ட தடையாணையினை விலக்கிட அரசு மட்டத்தில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களிடம் மாநில மையத்தின் சார்பில் வலுவாக எடுத்துரைக்கப்பட்டதன் விளைவாக இப்பணிகள் தற்போது மிகவேகமாக நடைபெற்று வருவதாகவும், இதனால் இம்மாத இறுதிக்குள் நிலுவையிலுள்ள மூன்று ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் விரிவாக எடுத்துரைத்தார்.

பட்டதாரி அல்லாதோர் பணியிறக்க பாதுகாப்பு விதித்திருத்த அரசாணை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட மாவட்ட / கோட்ட / வட்ட அளவில் கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்துதல் / நிதி ஒதுக்கீடு வழங்குதல், பேரிடர் மேலாண்மைத் துறையில் கலைக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வாளர், அலுவலக உதவியாளர் பணியிடங்களை மீண்டும் வழங்கிடக் கோருதல், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் மசால்சி ஆகிய 3000-க்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை காலமுறை ஊதியத்தின் கீழ் உடன் நிரப்பிடக் கோருதல் உள்ளிட்ட பிரதான கோரிக்கைகள் தொடர்பான கோப்பு அரசின் தொடர் நடவடிக்கைகளில் உள்ளது என்றும், இது குறித்து மாநில மையத்தின் சார்பில் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதால் அநேக கோரிக்கைகளின் மீது இம்மாத இறுதிக்குள் அரசாணை பெறுவதற்கான சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது என்றும், நமது இடைவிடாத இயக்க நடவடிக்கைகளே இதற்கு முழுமுதற் காரணமாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

மாநில மையத்தின் சார்பில் மாவட்ட நிர்வாகிகளுக்கு ஸ்தாபனம் குறித்த பயிற்சி அளித்திட திட்டமிடப்பட்டு ஏற்கனவே கடலூர், திருவள்ளூர், கோயம்புத்தூர் ஆகிய மூன்று மண்டலங்களில் 14 மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கு சிறப்பான முறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும், இதனால் மேற்கண்ட மாவட்டங்களில் ஸ்தாபனம் சார்ந்த நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவிலான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே நிலுவையிலுள்ள 5 மண்டலங்களிலும் விரைந்து மண்டல பயிற்சியினை நிறைவு செய்திட வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் ஸ்தாபனத்தை வலுப்படுத்துவது குறித்தும், சில மாவட்டங்களில் ஸ்தாபனம் சரியான முறையில் செயல்படாததால் உறுப்பினர்களின் குறைகளை களைவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு அம்மாவட்டங்களில் ஸ்தாபனத்தை வலுப்படுத்திடும் விதமாக மாநில நிர்வாகிகள் செயல்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் தெரிவித்தார். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தொடர் இயக்க நடவடிக்கைகளின் காரணமாக விதிகளுக்கு புறம்பாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட

கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் திரு.மனோஜ்முனியன் என்பவரது தற்காலிக பணி நீக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டாலும், அறவழியில் போராடிய வருவாய்த்துறை அலுவலர்கள் மீது காவல் துறையை ஏவிவிட்டு கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதன் வாயிலாக கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு.ஷ்ரவன் குமார், இ.ஆ.ப., அவர்கள் தொடர்ந்து ஊழியர் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லையென்றும், எனவே இவருக்கு எதிராக தொடர் இயக்க நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டியதன்அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்து வரும் பல்வேறு பிரச்சனைகள், கலைஞர் மகளிர் உதவித்தொகைத் திட்டப் பணிகளில் வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்து வரும் அதீத பணி நெருக்கடி, இளநிலை வருவாய் ஆய்வாளர்/தட்டச்சர் ஆகியோருக்கு இடையே ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயம் செய்வதில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள், அனைத்து நிலையிலான பதவி உயர்வில் ஏற்பட்டுள்ள சுணக்கம், உணவு பொருள் வழங்கல் துறையில் காலியாகவுள்ள 300-க்கும் மேற்பட்ட அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரந்தரமாக கலைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் வருவாய்த்துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்கள் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது, அநேக மாவட்டங்களில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் காரணமாக துணை வட்டாட்சியர்கள் பணியிறக்கம் செய்யப்பட்டுள்ளதால் மாவட்டங்களில் ஊழியர்களிடையே நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை, இளநிலை வருவாய் ஆய்வாளர் தட்டச்சர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர் ஆகிய நிலைகளில் மாவட்ட மாறுதல் கோரி வரப்பெறும் மனுக்களை முடிவு செய்வதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் நிலவி வரும் ஊழியர் நலன் சார்ந்த பிரச்சனைகள் குறித்தும் மாநிலத் தலைவர் விரிவாக எடுத்துரைத்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் பெறுதல் உள்ளிட்ட வருவாய்த்துறை ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையினை வலியுறுத்தி எதிர்வரும் டிசம்பர் மூன்றாவது வாரத்தில் சென்னையில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைர விழா மாநில மாநாடு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது குறித்தும், இதற்கு முன்பாக அனைத்து வட்டக்கிளை மற்றும் மாவட்ட மையங்களில் வட்ட / மாவட்ட மாநாடுகளை சிறப்பாக நடத்தப்பட வேண்டுமென்றும், இதற்காக மாநில நிர்வாகிகள் பொறுப்பு மாவட்டங்களில் பேசி விரைந்து வட்ட / மாவட்ட மாநாடுகளை நடத்திட நடவடிக்கை எடுத்திடவேண்டியதன் அவசியம் குறித்தும், விரிவாக எடுத்துரைத்தார்.

இளநிலை வருவாய் ஆய்வாளர்/முதுநிலை வருவாய் ஆய்வாளர் ஆகிய பதவிகளை தமிழ்நாடு வருவாய் சார்நிலைப் பணித் தொகுதிக்கு கொண்டு செல்வதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து விவாதித்து அறிக்கை சமர்ப்பித்திட மாநில / மாவட்ட நிர்வாகிகள் உள்ளடக்கிய குழு ஏற்படுத்தி, இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசிற்கு விரிவான முறையீடு அளித்திட வேண்டியதன் தேவை குறித்தும், எனவே இப்பணியினை விரைந்து செயல்படுத்திட வேண்டுமென்றும் மாநிலத் தலைவர் விரிவாக எடுத்துரைத்தார்

பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் தனது உரையில் 05.08.2023-ல் சிவகங்கை நகரத்தில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக கடந்த ஒரு மாத காலத்தில் மாநில மையத்தின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள கடந்த கால நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக கடந்த 16.08.2023 அன்று சென்னையில் வருவாய்த்துறை செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர், கூடுதல் ஆணையர், வருவாய் நிர்வாகம் உள்ளிட்ட உயர் அலுவலர்களிடம் சிவகங்கை மத்திய செயற்குழு கூட்ட முடிவுகளை வழங்கி வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளின் மீது விரைந்து ஆணைகள் வெளியிட வலியுறுத்தப்பட்டது குறித்தும், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு.ஷ்ரவன் குமார், இ.ஆ.ப., அவர்களின் ஊழியர் விரோத போக்கினை சுட்டிக்காட்டி அவர் மீது நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மற்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ஆகியோரிடம் விரிவான முறையீடுஅளிக்கப்பட்டுள்ளது குறித்தும் எடுத்துரைத்தார்.

மேலும் கடந்த 24.08.2023 அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களை சென்னை இல்லத்தில் சந்தித்து கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திற்கு கூடுதல் பணியிடங்கள் வழங்கிடக் கோருதல், பட்டதாரி அல்லாதோர் பணியிறக்க பாதுகாப்பு விதித்திருத்த அரசாணை, நீண்ட நாட்களாக காலியாகவுள்ள 3000-த்திற்கும் மேற்பட்ட அலுவலக உதவியாளர் பணியிடங்களை விரைந்து நிரப்பிட கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையரை வலியுறுத்திடக் கோருதல் மற்றும் கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் திரு.மனோஜ்முனியன் என்பவரது தற்காலிக பணி நீக்கத்தினை ரத்து செய்திட வலியுறுத்தப்பட்டது ஆகியவை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த 30.08.2023 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிச் செயலாளர் திரு.சண்முகம், இ.ஆ.ப., அவர்களை சந்தித்து கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஷ்ரவன் குமார், இ.ஆ.ப., அவர்களின் தொடர் ஊழியர் விரோத போக்கு தொடர்பாக விரிவாக முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும், கடந்த 31.08.2023 அன்று நிதித்துறை செயலாளர் திரு.உதயச்சந்திரன் இ.ஆ.ப., மற்றும் நிதித்துறை இணைச் செயலாளர் திரு.கிருஷ்ணனுன்னி இ.ஆ.ப., ஆகியோரை சந்தித்து கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை செயல்படுத்திட இதுவரை புதிய பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படாதது குறித்து பேசப்பட்டது தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த 08.09.2023 அன்று வருவாய்த்துறை செயலாளர் திரு.இராஜாராமன், இ.ஆ.ப., மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிச் செயலாளர் திரு.சண்முகம், இ.ஆ.ப., மற்றும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஆகியோரை சந்தித்து கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர்நல தனி வட்டாட்சியர் திரு.மனோஜ்முனியன் என்பவரின் தற்காலிக பணி நீக்கத்தை ரத்துசெய்திட வலியுறுத்தி கள்ளக்குறிச்சியில் அறவழியில் போராட்டம் நடத்திய 100-க்கும் மேற்பட்ட வருவாய்த்துறை அலுவலர்களின் மீது கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் தூண்டுதலின் பேரில் காவல்துறை கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு

பதிவு செய்துள்ளது ஜனநாயக விரோதசெயல்பாடு என்றும், எனவே இதனை ரத்து செய்திட வலியுறுத்தி முறையீடு அளித்துபேசப்பட்டது குறித்தும், விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த கால நடவடிக்கைகளில் குறிப்பாக கடந்த 25.08.2023-ல் கள்ளக்குறிச்சி மாவட்டம், ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் திரு.மனோஜ்முனியன் என்பவரை விதிகளுக்கு புறம்பாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்திட வலியுறுத்தி மாநிலம் முழுவதும் நடைபெற்ற தர்ணா போராட்டம், 1000 இடங்களில் தட்டி வைக்கப்பட்ட நிகழ்வு, 29.08.2023அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கடலூர், சேலம், திருவண்ணாமலைமற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டத்தைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்ட தொடர் காத்திருப்பு போராட்டம் மற்றும் இதனைத் தொடர்ந்து 30.08.2023 அன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த 14000 வருவாய்த்துறை அலுவலர்களும் கலந்துகொண்ட மிக எழுச்சியான பணிப் புறக்கணிப்பு போராட்டம் ஆகியவை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமையப் பெற்று தமிழகம் முழுமைக்கும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், இதன் காரணமாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் திரு.மனோஜ்முனியன் என்பவரது தற்காலிக பணி நீக்கம் விலக்கிக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் இரவே மீளப்பணியிடம் வழங்கப்பட்டது இதுவரை நடந்திராத மிக சிறப்பான வரலாற்று நிகழ்வு என்றும், இதற்கு காரணம் நமது அமைப்பின் பலம் மற்றும் உறுப்பினர்களின் ஒற்றுமை ஆகியவைதான் என்று குறிப்பிட்டார்.

மாநில மையத்தின் சார்பில் நடத்தப்பட்டு வரும் மண்டல பயிலரங்கம் மாவட்டங்களில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாவும், எனவே திட்டமிட்டபடி அனைத்து மண்டலப் பயிரங்கத்தினையும் இம்மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் நடப்பாண்டிற்கான உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக்குரல் சந்தா, கட்டட நிதி, சேலம் மாநாட்டு நிதி, மாநில மையகாலண்டர் நிதி மற்றும் TNROA மாநாட்டு நிதி உள்ளிட்ட நிதி நிலுவை இனங்கள் குறித்த அறிக்கையினை கூட்டத்தில் தாக்கல் செய்தார்.

அனைத்து மாநில நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள் மற்றும் ஆக்கபூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒரு மனதாக எடுக்கப்பட்டன.

1) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் கோரிக்கையினை ஏற்று கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் திரு.மனோஜ்முனியன் என்பவரது இடைக்கால பணி நீக்கத்தினை இரத்து செய்து, மீண்டும் பணியிடம் வழங்கிய தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது.

2) பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பதவி உயர்வினை உத்திரவாதப்படுத்தி விதித்திருத்தஅரசாணை வெளியிடுதல், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தினை செயல்படுத்திட கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துதல் மற்றும்

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப., அவர்களின் தொடர் ஊழியர் விரோத நடவடிக்கை குறித்து நடுநிலையானஅலுவலர் மூலம் விசாரணை செய்து நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட (வரிசை எண் 3 முதல் 5வரை குறிப்பிட்டுள்ள) பின்வரும் மூன்று பிரதானமான கோரிக்கைகளை 30.09.2023-க்குள் நிறைவேற்றிட வலியுறுத்தி எதிர்வரும் 20.09.2023 மற்றும் 21.09.2023 ஆகிய இரண்டு தினங்கள் தமிழகத்தின் 38 மாவட்டங்களைச் சேர்ந்த 14000-ம் வருவாய்த்துறை அலுவலர்களும் கோரிக்கை அட்டை அணிந்து பணிபுரிவது எனவும், 20.09.2023 அன்று மாவட்ட ஆட்சியர்களிடம் 'பெருந்திரள் முறையீடு" அளிப்பது மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நேரடியாக 'விரைவு அஞ்சலில்"; முறையீடு அனுப்புவது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

3) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கையான, மாண்பமை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள பட்டதாரி அல்லாத அலுவலர்களுக்கான பதவி உயர்வு பணிப்பாதுகாப்பு விதித்திருத்த அரசாணையினை 30.09.2023-க்குள் வெளியிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

4) கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பணிகள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நிராகரிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களை விசாரணை செய்திட வருவாய் கோட்டாட்சியர்கள் விசாரணை அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது இத்திட்டத்திற்கான பணிகள் முழுமையாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலமாக செயல்படுத்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பணி முழுவதையும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலமாக மேற்கொள்ள நிர்ப்பந்திப்பதன் மூலம் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு அதீத பணி நெருக்கடி உருவாக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை தொய்வின்றி சிறப்பாக மேற்கொள்ள ஏதுவாக மாவட்ட, கோட்ட மற்றும் வட்ட அளவில் புதியபணியிடங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை உடனடியாக வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

5) கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் திரு.மனோஜ்முனியன் என்பரை விதிகளுக்கு புறம்பாக தற்காலிகப் பணிநீக்கம் செய்ததை ரத்து செய்திட வலியுறுத்தி அறவழியில் போராட்டம் நடத்திய வருவாய்த்துறை அலுவலர்கள் மீது கடுமையான பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்திடக் காரணமாக இருந்த கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு.ஷ்ரவன் குமார், இ.ஆ.ப., அவர்களின் தொடர் ஊழியர் விரோத போக்கு குறித்து விசாரணை செய்து அவர் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், மேலும் வருவாய்த்துறை அலுவலர்கள் மீது புனையப்பட்டுள்ள பொய் வழக்குகளை ரத்து செய்திட வலியுறுத்துவதென்றும், அவ்வாறு இல்லாதபட்சத்தில் தொடர் இயக்க நடவடிக்கைகளை திட்டமிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

6) 2020, 2021 மற்றும் 2023-ம் ஆண்டுகளுக்குரிய துணை ஆட்சியர் பட்டியலை விரைந்து வெளியிடவும், வட்டாட்சியர்களாக பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள 45 துணை ஆட்சியர்களுக்கு அவர்களின் பணி முதுநிலை மற்றும் பணித்தன்மை ஆகியவற்றை

கருத்தில் கொண்டு மீண்டும் துணை ஆட்சியர் பதவி உயர்வு வழங்கிட துரித நடவடிக்கை எடுத்திட தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்தவதென முடிவு செய்யப்பட்டது.

7) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பெரும் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர், உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016-ம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு 7 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை விதித் திருத்தம் வெளியிடப்படாததால் அரசாணையினை நடைமுறைப்படுத்திட இயலவில்லை. எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாமல் உடன் அரசாணையை வெளியிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது. சிவகங்கை மத்திய செயற்குழு மற்றும் மாநில நிர்வாகிகள் கூட்டங்களில் முடிவு செய்தபடி, இவ்வினத்தில் பதவி உயர்வில் இடஒதுக்கீடு பாதிப்பின்றி நடைமுறைபடுத்திடுவது குறித்து விரிவாக பரிசீலனை செய்து பரிந்துரை அளிக்க 7 நபர்களைக் கொண்ட குழு அமைத்திட முடிவாற்றப்பட்டது. மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன், பொதுச் செயலாளர் சு.சங்கரலிங்கம், மாநிலத் துணைத் தலைவர் வெ.அர்த்தனாரி, மாநிலச் செயலாளர் பி.செந்தில்குமார், மாவட்ட நிர்வாகிகள் திரு.சக்திவேல் (கிருஷ்ணகிரி), திரு.ரமேஷ் (ஈரோடு), திரு.காதர்அலி (கள்ளக்குறிச்சி) ஆகியோர் கொண்ட குழு இது குறித்து ஆய்வு செய்து, ஒருமாத காலத்தில் அறிக்கை அளித்திட என முடிவு செய்யப்பட்டது.

8) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்து றையில் பணிபுரிந்துவரும் அலுவலர்கள் இயற்கை சீற்றம், சட்டம்-ஒழுங்கு பராமரித்தல், முக்கிய பிரமுகர்கள் வருகை, பல்வேறு வகையிலான நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குதல் மற்றும் சட்டமன்ற / பாராளுமன்ற தேர்தல் பணிகள் உள்ளிட்ட அதிமுக்கியமான பணிகளை இரவு, பகல் பாராது விடுமுறை தினங்களில்கூட தொடர்ந்து 24 மணி நேரமும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே இவர்களின் பணிப்பளு மற்றும் பணித்தன்மையினை கருத்தில் கொண்டு அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனி ஊதியம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

9) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் காலியாக உள்ள 3000-த்திற்கும் மேற்பட்ட அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பிடுவது குறித்து தமிழக அரசால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள இரண்டு கடிதங்களின் அடிப்படையில் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உரிய சுற்றறிக்கை அனுப்பி அனைத்து காலிப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களை வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

10) பேரிடர் காலங்களில் மக்களின் உயிரை காக்கக்கூடிய பல்வேறு பணிகளை மேற்கொண்டு வரும் பேரிடர் மேலாண்மைப் பிரிவில் செயல்பட்டுவந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களை 31.03.2023 முதல் கலைத்து ஆணையிடப்பட்டுள்ளதை ரத்து செய்து, கலைக்கப்பட்ட 97 பணியிடங்களையும் மீண்டும் உருவாக்கிட தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

11) மாவட்ட வருவாய் அலகுகளிலிருந்து ஒருவழி / இருவழி மாவட்ட மாறுதல் கோரி முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய நிலைகளில் வருவாய் நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பப்படும் முன்மொழிவுகளை பரிசீலனை செய்து ஆணைப் பிறப்பித்திட அதீத கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் மாவட்ட மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ள வருவாய்த்துறை அலுவலர்கள் மிகுந்த மனச்சோர்வுடன் பணிபுரிந்து வருகின்றனர். எனவே வருவாய்த்துறையில் மாவட்ட மாறுதலுக்கு பரிந்துரை செய்து மாவட்ட ஆட்சியர்களால் அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவுகளை பரிசீலனை செய்து காலதாமதமின்றி ஆணை வழங்கிடுமாறு வருவாய் நிருவாக ஆணையரை வலியுறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

12) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் தற்போது மிகுந்த பணி நெருக்கடியுடன் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மிகுதியான அளவில் வரப்பெறும் மனுக்களை விரைவாக முடிவு செய்திடும் பொருட்டு பொது மக்களின் நலன் கருதி ‘முதல்வரின் முகவரி” மற்றும் பொது மக்களுக்கான சான்றிதழ் வழங்கிடும் பணிக்கென அனைத்து வட்டத்திற்கும் தலா ஒரு சிறப்பு துணை வட்டாட்சியர் பணியிடம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

13) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் ஒப்பளிக்கப்பட்டுள்ன 2024 தற்காலிகப் பணியிடங்களில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மாதந்தோறும் ஊதியம் பெறுவதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகிறது. இதனைக் களைந்திடும் விதமாக மாதந்தோறும் ஊதியக் கொடுப்பாணை வழங்கிடும் நடைமுறையினை இரத்து செய்திடுமாறும், மேலும் தற்காலிக பணியிடங்களை மறுசீரமைத்திட தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவிலிருந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு விலக்கு அளித்திடுமாறும் தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

14) வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்புகளில் பயன்பாட்டிற்கு தகுதியற்ற ஈப்புகளை கழிவு செய்து அவற்றிற்கு பதிலாக 250 புதிய ஈப்புகள் வழங்கிட பரிந்துரைத்து அரசினால் அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவு நிதித்துறையில் ஓராண்டாக தேக்கமடைந்துள்ளது. இதனை விரைவாக முடிவு செய்து புதிய ஈப்புகள் வழங்கிட ஒப்பதல் அளித்திடுமாறு நிதித்துறை செயலாளர் அவர்களை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

15) புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் கடந்த 04.04.2012 அன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதிகமான காலிப்பணியிடம் இருந்தும், உரிய காலத்தில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இதனால் பட்டியலில் இடம் பெற்றிருந்த அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை சரிசெய்திடக் கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசிடம் கடந்த ஓராண்டிற்கு மேலாக நிலுவையில் உள்ளது. எனவே இதுகுறித்து பாதிக்கப்பட்டுள்ள அலுவலர்களை நேரிடையாக விசாரணை செய்து உரிய ஆணை பிறப்பித்திட வருவாய்த்துறை செயலாளரை வலியுறுத்துவனெ முடிவு செய்யப்பட்டது.

16)ஒருங்கிணைந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியலில் முதுநிலை நிர்ணயித்தல் தொடர்பாக தேனி, மதுரை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களை நேரடி விசாரணை மேற்கொண்டு, வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவு கடந்த ஓராண்டாக அரசிடம் நிலுவையில் உள்ளது. இதன் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து உரிய ஆணைகள் பிறப்பித்திட தமிழக அரசை வலியுறுத்துவதெனமுடிவு செய்யப்பட்டது.

17) வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணிக்கு ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு மேற்கொண்ட மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்கள் ஏற்படுத்துதல் மற்றும் 31.05.2022 முதல் கலைக்கப்பட்ட தற்காலிக இளநிலை உதவியாளர் பணியிடங்களை மீண்டும் தோற்றுவித்திட தமிழக முதன்மைத் தேர்தல் அலுவலரை மீண்டும் வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

18) தமிழகத்தில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு மதுபானம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் வடிப்பக ஆலைகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற மதுபான உற்பத்தியைவிட தற்போது பன்மடங்கு உற்பத்தி கூடுதலாக நடைபெறுவதால் அங்கு பணிபுரியும் குறைந்த அளவிலான வருவாய்த்துறை அலுவலர்களின் பணிப்பளுவினை கருத்தில் கொண்டும், தவறான பயன்பாடுகளை தடுத்திடும் வகையிலும், கூடுதலாக செய்யப்பட்டு வரும் உற்பத்தித் திறனிற்கேற்ப புதிய வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் பணியிடங்களை ஏற்படுத்திட உள்துறை செயலாளர் அவர்களை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

19) 16.08.2022, 01.11.2022, 10.05.2023 மற்றும் 16.05.2023 ஆகிய தேதிகளில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அரசு மட்டத்திலான பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அனைத்து கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்றிடுமாறு தமிழகஅரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

20) மாநில மையத்தின் சார்பில் மாவட்ட நிர்வாகிகளுக்கு ஸ்தாபனம் குறித்த பயிற்சி அளித்திட திட்டமிடப்பட்டு ஏற்கனவே கடலூர், திருவள்ளூர், கோயம்புத்தூர் ஆகிய மூன்று மண்டலங்களில்14 மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கு சிறப்பான முறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நிலுவையிலுள்ள 5 மண்டலங்களிலும் மண்டல பயிற்சியினை எதிர்வரும் 30.09.2023-க்குள் நிறைவு செய்வதென முடிவு செய்யப்பட்டது.

21) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைர விழா ஆண்டு மாநில மாநட்டினை எதிர்வரும் டிசம்பர் இரண்டாவது அரைத் திங்களில் சென்னையில் நடத்திடுவது என்றும், அதற்கு முன்பாக அனைத்து மாவட்டங்களிலும் வட்ட / மாவட்ட மாநாடுகளை நடத்தி முடித்திடுவதற்கு பொறுப்பு மாநில நிர்வாகிகள் சிறப்பான முறையில் திட்டமிட்டு செயலாற்றிட வேண்டுனெ முடிவு செய்யப்பட்டது.

22) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை மேலும் வலுப்படுத்திட உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 100% நிறைவு செய்து 30.09.2023-க்குள் செலுத்திட அனைத்து மாவட்டங்களையும் வலியுறுத்துவதெனவும், மேலும், சென்னை தலைமையக கட்டட நிதிநிலுவை, சேலம் கோரிக்கை மாநாடு பங்களிப்பு

நிதி, அரசு ஊழியர் சங்க மாநாடு நிதி, 2023-ம் ஆண்டிற்கான நாட்குறிப்பு நிதி மற்றும் நாட்காட்டி நிதி உள்ளிட்டஅனைத்து நிதி நிலுவை இனங்களையும், இம்மாத இறுதிக்குள் செலுத்திடுமாறு மாவட்ட மையங்களை வலியுறுத்தவதென முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக, மாநிலத் துணைத் தலைவர் திரு.ஏ.மணிகண்டன் குறுகிய காலத்தில் மாநில நிர்வாகிகள் கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த திருச்சிராப்பள்ளி மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

பெறுதல்
மாவட்டத் தலைவர், மாவட்டச் செயலாளர், மாவட்டப் பொருளாளர்
மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்,
அனைத்து மாவட்டங்கள்.
நகல்: அனைத்து மாநில நிர்வாகிகள்.




சேலம் மாவட்ட வருவாய் அலகில் வட்டாட்சியராக பணியாற்றி தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சேலம் மாவட்டத் தலைவராக வெகு சிறப்பாக தன்னலம் பாராது ஊழியர் நலன் ஒன்றே குறிக்கோளாக சங்கப் பணியாற்றி துணை ஆட்சியராக பதவி உயர்வில் சென்றுள்ள மரியாதைக்குரிய அன்பு சகோதரி திருமதி. வி.வள்ளிதேவி அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழா.



நல்லாசிரியருக்கான தமிழக அரசின் டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழாவில் நமது வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநிலத் துணைத் தலைவர் தோழர் செந்தூர்ராஜன் அவர்களின் இல்லத்தரசி முனைவர். மஞ்சுளாதேவி (முதுநிலை விரிவுரையாளர்) அவர்கள் விருது பெற்றதை மாநில மையத்தின் சார்பாக பாராட்டுகிறோம்



ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் சென்னை தலைமைச் செயலகச் சங்கத்தில் நடைபெற்றது, இதில் நமது மாநிலத் தலைவர் தோழர் முருகையன் கலந்து கொண்டார்




கோவையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டப் பிரதிநிதித்துவப் பேரவையில் நமது சங்க மாநிலச் செயலாளர் தோழர் செந்தில்குமார் பங்கேற்று சிறப்புரையாற்றினார்

# மனநலம் என்னும் அடிப்படை மனித உரிமை



ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 10ஆம் தேதி, உலக மனநல நாளாகக் கொண்டாடப்படுகிறது. ‘மனநலம் என்பது உலகளாவிய மனித உரிமை’ என்பதை இந்த ஆண்டுக்கான கருப்பொருளாக சர்வதேச மனநல சம்மேளனம் அறிவித்திருக்கிறது. ஆம்; மனநலம் என்பது அனைத்து மக்களுக்குமான அடிப்படை மனித உரிமை. ஒவ்வொருவருக்கும் அவர் யாராக இருந்தாலும், எங்கிருந்தாலும், எந்தச் சமூக-பொருளாதாரப் பின்னணியில் இருந்தாலும் மனநலத்தின் உயரிய நிலையை அடைய அவருக்கு முழு உரிமை உண்டு.

மனநலம் என்பது, தனிப்பட்ட ஒரு நபரின் தினசரி வாழ்க்கையை மட்டுமே சார்ந்ததல்ல. பல்வேறு சமூக-பொருளாதாரக் காரணிகள் ஒருவரின் மனநிலையை நிர்ணயிக்கின்றன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால், தனிநபர் ஒருவர் மனநலமுடன் இருப்பது அவரின் பொறுப்பு மட்டுமல்ல, அந்தச் சமூகத்தின் பொறுப்பு, அரசாங்கத்தின் பொறுப்பு.

இன்றைய சூழலில் மனநலம் என்பது அவ்வளவு அத்தியாவசியமானதாக இருக்கிறது. பல்வேறு மனநலப் பிரச்சினைகளையும், அதற்குக் காரணமான, அதன் விளைவால் ஏற்படக்கூடக்கூடிய சமூகச் சீர்கேடுகளையும் சமீப காலத்தில் மிக அதிகமாகப் பார்த்துவருகிறோம். இந்நிலையில், மனநலம் தொடர்பாக சில அடிப்படைப் புரிதல்களை நாம் கொண்டிருப்பது அவசியமானது.

மனநலம் என்றால் என்ன? - ஒருவரின் எண்ணங்கள், உணர்வுகள், அறிவு ஆகியவை அவருக்கும் அவரைச் சார்ந்த சமூகத்துக்கும் பயனுள்ள வகையில் இருக்கும் நிலையையே மனநலம் என வரையறுக்கலாம். தன்னைப் பற்றியே சிந்தித்து சமூக நலனைப் புறக்கணிப்பதையும், அல்லது சமூகத்தைப் பற்றியே சிந்தித்துத் தனது நலனைப் புறக்கணிப்பதையும் மனநலச் சீர்கேடுகள் எனச் சொல்லலாம். ஒருவருடைய எண்ணம், உணர்வு, அறிவால் அவருக்கோ சமூகத்துக்கோ ஆபத்தான வகையில் அவரின் நடவடிக்கைகள் மாறினால் அதை மனநோய் எனச் சொல்லலாம்.

மனநலமின்மைகள் எல்லாமே மனநோயா? - பொதுவாக, உடல்நலப் பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு மனநலப் பிரச்சினைகளைப் பற்றி

யாருடனும் நாம் பகிர்ந்துகொள்வதில்லை. அதற்குக் காரணம், மனம் சரியில்லை என்றால் அதை மனநோய் என்று சொல்லிவிடுவார்களோ என்கிற பயம். நலமின்மைகள் வேறு; நோய் வேறு. நவீன வாழ்க்கையின் புதிய அழுத்தங்களினாலும் சமநிலையற்ற உணவுப் பழக்கங்களினாலும் பல்வேறு மனநலச் சீர்கேடுகளுக்கு நாம் ஆளாகியிருக்கிறோம், இவையெல்லாம் மனநோய் கள் அல்ல.

இந்தச் சீர்கேடுகளையெல்லாம் சரியான நேரத்தில் கவனப்படுத்தி, அதற்கான உதவியைக் கேட்டுப்பெற்றுச் சரிசெய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நமது அன்றாட வாழ்க்கையை நிம்மதியாகவும், நமக்கும் பிறருக்கும் பயனுள்ள வகையிலும் வாழ முடியும்.

மனநலம் ஏன் அவசியம்? - ஒருவர் உடல்நலத்துடன் இருந்தால் அது அவருக்கு மட்டுமே நல்லது. ஆனால், மனநலமுடன் இருந்தால் ஒட்டுமொத்தச் சமூகத்துக்குமே நல்லது. சமீப காலத்தில் மனநலப் பிரச்சினைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன - குறிப்பாகக் குழந்தைகள், பதின்பருவத்தினர், முதியவர்கள் பல்வேறு மனநலப் பிரச்சினைகளால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். மனநலத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதும், மனநலப் பிரச்சினைகளை அலட்சியப்படுத்தாமல் உடனுக்குடன் சரிசெய்வதற்கான முயற்சியை எடுப்பதும்தான் அதிகரித்துவரும் இந்தப் பிரச்சினை களைத் தடுப்பதற்கான வழி.

உடல் நலமாக இருப்பதற்கு, மனம் நலமாக இருப்பது அவசியம். மனநலச் சீர்கேடுகளுக்குச் சரியான நேரத்தில் சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் அலட்சியப்படுத்துவதால் உடல் பருமன், ரத்த அழுத்தம், இதய நோய்கள், குடல் நோய்கள், மறதி நோய் போன்ற நோய்கள் வருவதாக ஆராய்ச்சிகள் சொல்கின்றன. அதேபோல மனச் சோர்வு, மனப்பதற்றம் போன்ற பிரச்சினைகள் இருக்கும்போது, நீரிழிவு நோய், சிறுநீரக நோய்கள் போன்றவற்றை வழக்கமான சிகிச்சைகளினால் கட்டுப்படுத்த முடியாமல் போவதாகவும் ஆராய்ச்சி கள் சொல்கின்றன.

உடல் நலமுடன் இருப்பது வாழ்நாளை அதிகப்படுத்தும், மனம் நலமுடன் இருப்பதுதான் வாழும் நாள்களை அர்த்தமுள்ளதாக மாற்றும். எனவே, மனநலமுடன் இருப்பது அனைத்து வகையிலும் அவசியமானது.

மனநோய்கள் ஏன் ஏற்படுகின்றன? - பெரும்பாலும் தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையில் நடக்கக்கூடிய சில அதிர்ச்சியான சம்பவங்களால்தான் மனநோய்கள் ஏற்படும் என நாம் நினைக்கிறோம்; அது தவறானது. மனநோய்கள் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

மரபணுக் கோளாறுகள், நோய்த் தொற்று போன்ற உடலியல்ரீதியான காரணங்கள், தனிப்பட்ட ஒருவரின் ஆளுமைப் பண்புகள், அவரின் உணர்வுகள், மதிப்பீடுகள், அனுபவங்கள் போன்ற உளவியல்ரீதியான காரணங்கள், சமூகச் சீர்கேடுகள், பாகுபாடுகள், வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, அரசாங்கத்தின் புதிய சட்டங்கள் போன்ற சமூகக் காரணிகள் எனப் பல்வேறு காரணங்களால் மனநோய்கள் ஏற்படலாம்.

தீவிரமான மனநோய்கள் பெரும்பாலும் உடலியல் காரணங்களால் ஏற்படுகின்றன. அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளக்கூடிய பல்வேறு மனநலப் பிரச்சினைகள்

பெரும்பாலும் உளவியல்-சமூகக் காரணங்களினாலேயே வருகின்றன.

குணப்படுத்த முடியுமா? - முதலில், 'மனநோய் என்றாலே அது ஒன்றுதான், அது குணப்படுத்த முடியாதது' என்ற பொதுமைப்படுத்தப்பட்ட கருத்திலிருந்து நாம் வெளியே வரவேண்டும். மனநோய்களைப் பொறுத்தவரை பல்வேறு வகைகள் உண்டு. சில வகை மனநோய்கள் சரியான நேரத்தில் சிகிச்சையளித்தால் எளிதில் குணப்படுத்தக்கூடியவையாக இருக்கின்றன.

சில வகை மனநோய்கள் குணப்படுத்தக்கூடியவை; ஆனால், சற்று நீண்டகாலச் சிகிச்சை தேவைப்படுபவையாக இருக்கின்றன. மிக அரிதாக ஒரு சில தீவிர மனநோய்களுக்கு வாழ்நாள் முழுவதும் சிகிச்சை தேவைப்படும், அந்தச் சிகிச்சையில் இருக்கும்போது முழுமையாகக் குணப்படுத்த முடியும். சிகிச்சையை நிறுத்தும்போது மீண்டும் நோய் அறிகுறிகள் வெளிப்படும்.

சிகிச்சை முறைகள் என்னென்ன? - நவீன மருத்துவ அறிவியல் வளர்ச்சியின் விளைவாக மனநல சிகிச்சை முறைகளில் பல புதிய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தீவிர மனநோய்களைக்கூட முழுமையாகக் குணப்படுத்தக்கூடிய சாத்தியங்கள் உருவாகியிருக்கின்றன. மனநலச் சிகிச்சை முறைகளைப் பொறுத்தவரை இரண்டு வகையான சிகிச்சைகள் இருக்கின்றன. ஒன்று, மாத்திரை, மருந்துகள், உடலியல் சார்ந்த சிகிச்சை முறைகள்; மற்றொன்று, உளவியல் சிகிச்சை முறைகள்.

மனநலப் பிரச்சினைகளின் தன்மை, தீவிரம் போன்றவற்றைப் பொறுத்து சிகிச்சை முறைகள் மாறுபடும். ஒருவருக்கு என்ன வகையிலான சிகிச்சை முறைகள் தேவைப்படும் என்பதை மனநல மருத்துவரே முடிவுசெய்வார். அதனால், மனநலப் பிரச்சினைகள் என்று வந்தால் உடனடியாக மனநல மருத்துவரைச் சென்று பார்ப்பதே சரியானது.

சரி, மனநோய்களுக்கு எடுத்துக்கொள்ளும் மாத்திரைகளுக்கு அடிமையாகி விடுவோம் என்று சொல்லப்படுவது உண்மையா? நிச்சயம் இல்லை. எந்த ஒரு சிகிச்சையும் அதன் தேவை கருதியே கொடுக்கப்படுகிறது, தேவையில்லாமல் யாருக்கும் எந்தச் சிகிச்சையும் கொடுக்கப்படுவதில்லை. சில வகையான மனநோய்கள் சில வாரங்களிலேயே முழுமையாகக் குணமாகக்கூடியவை.

அதற்குப் பிறகு அந்நோய்களுக்குச் சிகிச்சை தேவையில்லை. ஆனால், சில தீவிர மனநோய்களுக்கு நீண்ட நாள்கள் சிகிச்சை தேவைப்படலாம், அதற்காகவே நீண்ட நாள்களுக்கு மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றனவே தவிர, எந்த வகையிலும் அந்த மாத்திரைகள் அவற்றை எடுத்துக்கொள்வோரை அடிமையாக்காது. மனநோய்களின் தன்மையைப் பொறுத்தே சிகிச்சையின் கால அளவு நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ■

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.




TNROA 4வது மண்டலப் பயிலரங்கம் சேலத்தில் நடத்தப்பட்டது, இதில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், நாமக்கல் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டன




TNROA 5வது மண்டலப் பயிலரங்கம் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்றது.




TNROA 6வது மண்டலப் பயிலரங்கம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடத்தப்பட்டது. அதில் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்கள் கலந்துக்கொண்டன.

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
August 2023

Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TN/PMG (CCR) / WPP 3 / 2015-2017

தமிழ்நாடு வருவாய்த்துறை
அலுவலர் சங்கத்தின் மாநில
நிர்வாகிகள் கூட்டம் 9.9.2023
அன்று திருச்சிராப்பள்ளி நகரில்
TNROA சங்கக் கட்டிடம்
'சுந்தர்ராஜன் மேன்ஷனில்'
நடைபெற்றது.




If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
பழைய எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.